செ.வெ.எண் : 23 / ஆகஸ்ட் நாள் : 27.08.2020

## இராமநாதபுரம் மாவட்டம்

## மீன் உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்களுக்கு ரூ.10 இலட்சம் வரை அரசு மானியம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் 2020-2021 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட "ஆத்மநிர்பார் அபியான்" திட்டத்தின் ஒரு பகுதியாக அமைப்பு சாரா உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்களை வலுப்படுத்தும் நோக்கில் "பாரத பிரதமர் உணவு பதப்படுத்தும் நிறுவனங்களுக்கான திட்டம்" செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டமானது, மத்திய அமைச்சக உணவுப் பதப்படுத்தும் தொழில்துறை வழியாக, இராமநாதபுரம் மாவட்டத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை மூலம் செயல்படுத்தப்படும். குறிப்பாக, மத்திய அரசின் 60 சதவீதம் மற்றும் மாநில அரசின் 40 சதவீதம் நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் 2021 முதல் 2025-ம் ஆண்டு வரை என 5 ஆண்டுகளுக்கு செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தனிநபர் மற்றும் குழு அடிப்படையில், ஏற்கனவே உணவு பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு நிறுவனங்களை வலுப்படுத்துதல் அல்லது புதிய நிறுவனங்கள் தொடங்குதல், பொது உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி தருதல், வர்த்தக முத்திரை மற்றும் சந்தைப்படுத்துதல், தொழில் நுட்ப பயிற்சிகள் போன்ற இனங்களுக்கு நிதி உதவி வழங்கப்படும். மேலும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், சுய உதவி குழுக்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் நிதி உதவி வழங்கப்படும்.

"ஒரு மாவட்டத்திற்கு ஒரு விளைபொருள்" என்ற அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மீன் பதப்படுத்தும் தொழிலில் ஏற்கனவே ஈடுபட்டுள்ள மற்றும் புதிதாக தொடங்க உள்ள சிறு மீன் உணவு பதப்படுத்தும் நிறுவனங்களுக்கு, முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் ஒரு மீன் உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனம் தகுதியான திட்ட மதிப்பீட்டில் 35 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை நிதி உதவி பெற்று பயன் பெறலாம். மேலும் திட்டமதிப்பீட்டில் கூடுதலாக தேவைப்படும் நிதி உதவிக்கு வங்கிகள் மூலம் கடன் உதவி பெற வழிவகை செய்யப்படும்.

தற்போது, மாவட்ட அளவில் ஏற்கனவே இயங்கி வரும் சிறு மீன் உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் புதியதாக தொடங்க உள்ள நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சலுகைகளை பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) தொடர்பு கொள்ளலாம். (அலைபேசி எண்.9677367772)

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**